# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண். 5/2011
## மற்றும்
## அசல் வழக்கு எண். 92/2016

வாதி தரப்பு 3 வது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.அல்லிமுத்து, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர் பவித்ரா வா.சா.3 | சாதி |
| த/பெ. | மதம் |
| கிராமம் | தொழில் |
| தாலுகா | வயது |

---

முதல் விசாரணை 12-08-2024

நான் வாதி தரப்பு 3 வது சாட்சி. நான்விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக ஆவண காப்பகத்தில் இளநிலை வருவாய்ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க மாவட்ட ஆட்சித்தலைவர் எனக்கு கொடுத்த கடிதம் **சா.சா.ஆ.1** ஆகும். சாட்சிய அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். சாட்சிய அழைப்பாணையில் கூறியுள்ள ஆவணங்களின் அசல் மற்றும் சான்றிட்ட நகலை கொண்டுவந்துள்ளேன். சாட்சிய அழைப்பாணையில் கண்ட தும்மசின்னம்பட்டி கிராமம் ஜமீன் பைமாஸ் நம்பர் 641/642, சர்வே எண். 300/3 க்குரிய சர்வே செட்டில்மெண்ட் பதிவேட்டின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன் அது **சா.சா.ஆ.–2** ஆகும்.

2, 3 பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை :- இல்லை.